கூட்டுக் குடிநீர்த்திட்டம்.

*254 திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி தொகுதி—பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையம் —வெள்ளாளபாளையம் — குள்ளம்பாளையம் — நாதிபாளையம் நாகதேவன் பாளையம் — கடுக்காம்பாளையம் — வெள்ளாங்கோயில் ஆகிய ஊராட்சி மன்றங்களை இணைக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையம், வெள்ளாள பாளையம், குள்ளம்பாளையம், நாதிபாளையம், நாகதேவன் பாளையம், கடுக்காம்பாளையம், வெள்ளாங்கோவில் ஆகிய கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது. நீர் ஆதார இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. பின்னர், மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டபின் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏழு ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய அந்த கிராமங்களுக்கு ஆய்வுப்பணிகள் முடிவுற்றதாக குறிப்பிட்டார்கள். ஆய்வுப் பணிகள் முடிவுற்ற இந்த நேரத்தில் உடனடியாக மதிப்பீடுகள் தயாரித்து, இந்தப் பணிகளை விரைவாக தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? இன்றைக்கு பல்வேறு ஆழ்துளை கிணறுகள் பொய்த்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில் இதுபோன்ற கூட்டு குடிநீர்த் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும், இன்னும் அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது கோபியில் டிவிஷனல் அலுவலகம் ஒன்று 1—9—1989 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டு, ஒன்பது நாட்களுக்குள்ளாக இந்த டிவிஷனல் அலுவலகம் மாற்றப்பட்டு இருக்கிறது. அதைப்போல நிலைமை இருக்குமானால், இதுபோன்ற பணிகளை விரைவாக செய்ய முடியாமல், கால தாமதம் ஏற்படும் என்பதால், மிக விரைவாக அங்கே டிவிஷனல் அலுவலகத்தை உருவாக்க, அதனை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் நடைபெறுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்து அங்கே அலுவலகங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, நிர்வாக வசதியைப் பொறுத்து, புதிய அமைப்பை உருவாக்குவதைப் பொறுத்து, குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் அரசு மருத்துவமனை.

*5210—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருமங்கலம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி அதிக படுக்கைகள் கொண்டதாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இரா. சாமிநாதன் : தலைவர் அவர்களே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் நலம், குடும்ப நலக்கட்டுப்பாடு, தொழுநோய், காலரா, காசநோய் ஆகிய அத்தனை பிரிவுகளுக்கும் சேர்த்து 111 படுக்கை வசதிதான் தற்போது இருக்கிறது. மேலும், திருமங்கலம், உசிலம்பட்டி, சேடப்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் சேர்த்து குடும்பநல கட்டுப்பாட்டு முகாமும் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தான் நடத்தப்படுகிறது.